**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-20 No. 04 October-December2026**

# சங்க இலக்கியம் முதல் பன்னிரு திருமுறைகள் வழியாக மெய்கண்ட சாத்திரங்கள் வரை: சைவசித்தாந்தச் சிந்தனையின் வளர்ச்சிப் போக்கு

**J. Krishnavene**
Ph.D. Research Scholar, Department of Saiva Siddhanta
University of Madras, Chennai

**ஆய்வுச் சுருக்கம்**

சைவ சித்தாந்தம் என்பது வெளியிலிருந்து தமிழ் மண்ணுக்கு வந்து சேர்ந்த ஒரு தத்துவ அமைப்பு அன்று; தமிழ் மரபின் உள்ளிருந்தே படிப்படியாக வளர்ந்த மெய்ப்பொருளியல் ஆகும். இவ்வளர்ச்சியை ஒருங்கிணைத்து நிற்கும் அச்சு அன்பு எனும் ஒரே கருத்தாகும். சங்க இலக்கியத்தில் நிலமும் பொழுதும் சார்ந்த வாழ்வியல் நெறியாகத் தொடங்கி, தொல்காப்பியத்தில் அறமும் மனத்தூய்மையும் சார்ந்த இலக்கண வரையறையாக முதிர்ந்து, திருக்குறளில் அன்பு எனும் பொருண்மையின் தத்துவ வரையறையாகக் கூர்மைப்பட்டு, பன்னிரு திருமுறைகளில் பேரன்பு எனும் அனுபவமாகப் பெருகி, இறுதியில் மெய்கண்ட சாத்திரங்களில் அத்துவித அன்பு எனும் கொள்கை வடிவம் பெற்ற இத்தொடர்ச்சியை இக்கட்டுரை வரலாற்று முறையில் ஆராய்கிறது. கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கிய தமிழ் ஆராய்ச்சி, கண்ணுக்குப் புலப்படாத அன்பு எனும் கருத்துமுதல் நிலையை அடையாளம் கண்டு, அதனையே கடவுளை அறியும் கருவியாக நிறுவியது என்பதே இவ்வாய்வின் முடிபு.

**திறவுச்சொற்கள்:**

சைவ சித்தாந்தம், அன்பு, பேரன்பு, அருள், அத்துவிதம், சங்க இலக்கியம், திருக்குறள், பன்னிரு திருமுறைகள்.

## 1. முன்னுரை: ஆய்வுப் பின்புலமும் நோக்கமும்

இந்தியத் தத்துவ மரபுகளை ஆராயும் வழக்கமான முறை, வடமொழி மூலங்களை முதன்மைப்படுத்தி, தமிழ் நூல்களை அவற்றின் வழிநூல்களாகவோ மொழிபெயர்ப்புகளாகவோ கருதுவதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. இம்முறையின்படி நோக்கினால், சைவ சித்தாந்தம் என்பது சிவாகமங்களின் தமிழ் வடிவம் என்றும், பன்னிரு திருமுறைகள் அவற்றுக்குப் பத்தி இலக்கிய அணிசேர்ப்பாக மட்டுமே அமைந்தவை என்றும் முடிவு செய்ய நேரிடும். ஆனால் வரலாற்றுத் தரவுகளை நேர்முகமாக நோக்கும்போது இம்முடிபு நிலைக்கவில்லை.

சைவத்தின் அடிநிலைகளைத் தமிழ்த் தொல்குடி வரலாற்றுப் போக்கிலிருந்தே அறிய வேண்டும் என்பதை முனைவர் நல்லூர் சா. சரவணன் அவர்கள் தமது தமிழ் வரலாற்றில் சமய தத்துவம் எனும் நூலில் விரிவாக நிறுவியுள்ளார்.[1] அவர் காட்டும் வரலாற்று வரிசையின்படி, சிந்துவெளி நாகரிகத்திற்குக் கீழ்ப்பட்ட பண்டைய இந்தியப் பரப்பிற்கான தொல்குடி வரலாறு பழந்திராவிட இனத்திற்குரியது; தமிழ்க் குடியின் மிக முந்தைய

[1] நல்லூர் சா. சரவணன், முனைவர். தமிழ் வரலாற்றில் சமய தத்துவம், சென்னை, 2013, ப. 134.

அநாகரிக நிலை காட்டுகிற பல்வேறு அம்சங்களை வட இந்திய, தென்னிந்தியச் சான்றாதாரங்களில் திகழ்வதை உணரலாம்.[2]

இப்பின்புலத்தில் ஒரு தனிக் கேள்வி எழுகிறது. தொல்குடி வழிபாட்டு நிலையிலிருந்து தொடங்கி, சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள், பன்னிரு திருமுறைகள் வழியாக மெய்கண்ட சாத்திரங்கள் வரை நீளும் இந்த நீண்ட வளர்ச்சிக் கோட்டில், தொடர்ந்து மாறாமல் நிற்கும் மையக் கருத்து எது? சடங்கு மாறியது; வழிபாட்டு வடிவம் மாறியது; கடவுளின் பெயரடையாளம் மாறியது; இலக்கிய வடிவம் மாறியது; தத்துவக் கலைச்சொற்கள் மாறின. ஆனால் இவை அனைத்திலும் ஊடுருவி நிற்கும் ஒரே கருத்து அன்பு ஆகும். இக்கட்டுரையின் ஆய்வுக் கருதுகோள் இதுவே.

ஆய்வு முறையியலாக, இக்கட்டுரை காலவரிசை அடிப்படையிலான உரைப் பகுப்பாய்வை (chronological textual analysis) மேற்கொள்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் மூல நூல்களின் அடிகளை நேரடியாக எடுத்துக்காட்டி, அவ்வடிகளுக்கிடையேயான சொல்லாட்சித் தொடர்ச்சியையும் கருத்துத் தொடர்ச்சியையும் நிறுவும் முறை பின்பற்றப்படுகிறது. மேற்கோள்கள் அனைத்தும் மூல நூல்களிலிருந்தே எடுக்கப்பட்டு, விளக்கத்திற்கு நல்லூர் சா. சரவணன் அவர்களின் நூல் முதன்மைத் துணைநூலாகக் கொள்ளப்படுகிறது.

## 2. சங்க இலக்கியத்தில் சைவச் சிந்தனையின் அடிநிலைகள்

சைவம் என்னும் பெயரடையாளம் தோன்றுவதற்கு முன்னரே, தமிழ் நிலத்தில் ஒரு தொடர்ச்சியான வழிபாட்டு மரபு நிலவியது. அம்மரபின் அடையாளப் படிநிலைகளைத் தொல்லியல், மொழியியல், இலக்கியச் சான்றுகளின் வழி வரிசைப்படுத்த முடியும். இரும்புக்கால அடையாளத்திற்கும் முற்பட்டது கந்து எனும் அடிமர அடையாளம்; அது இலிங்கத்தோடும் தொடர்புபடுத்தப்படலாம். வேலன் மரபின் வழி வேல் அடையாளம் நிலைபெற்றது. மனித உருவ அடையாளம் தோன்றிய பின்னரே குமரன் தமிழில் சேய் எனப்பட்டான்.[3]

நல்லூர் சா. சரவணன் சுட்டும் மொழியியல் தரவின்படி, “சேயோன்” மற்றும் “சிவன்” இரு வேறு கடவுளர் அல்லர்; ஒரே தமிழ் இறைப்பொருளின் இரு மொழியியல் வெளிப்பாடுகள். சிந்து நாகரிகத் தாக்கத்திற்கு அப்பாற்பட்ட வடஇந்தியாவில் “சிவன்” என்ற சொல்லால் உற்பத்திக் கடவுளாகச் சிவன் அறியப்பட்டான்.[4] எனவே, இது காலத்தை முற்படுத்திக் கூறும் கருத்து அல்ல; ஒரே இறைமரபின் உள்ளார்ந்த தொடர்ச்சியைச் சுட்டும் கூற்று.

---

[2] மேலது, ப. 134.
[3] மேலது, ப. 135. மேலும் காண்க: P.K. Agarwal, Skanda-Kartikeya: A Study in the Origin and Development, Banaras Hindu University, 1967 (மேலது, ப. 145-இல் மேற்கோள் காட்டப்பட்டது).
[4] மேலது, ப. 136.

சங்க இலக்கியத்தில் இவ்வழிபாட்டு மரபு வெறும் சடங்காக நில்லாமல், அறத்தோடு இணைக்கப்பட்டிருப்பதே கவனிக்கத் தக்கது. கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டில்[5] காதலனின் மனநிலையை விவரிக்கும் இடத்தில், இவ்விணைப்பு மிகத் தெளிவாக வெளிப்படுகிறது:

**“உள்ளத் தன்மை உள்ளினன் கொண்டு,**
**சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி**
**வருநர்க்கு வரையா வள நகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலர் உண**
**பைந்நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில்**
**வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை,**
**நின்னோடு உண்டலும் புரைவது” என்று ஆங்கு**
**அறம் புணை ஆகத் தேற்றிபிறங்கு மலை**
**மீ மிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது,**
**ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி”**

*— குறிஞ்சிப்பாட்டு, வரி 200–210*

இவ்வடிகளின் அமைப்பு நுட்பமானது. காதல்பட்டவளைத் தழுவுகின்றான் காதலன்; அப்போதே அவள் எண்ணத்தையும் அறிகிறான்; இல்லறம் ஏற்றுப் பலருக்கும் விருந்து தந்து எஞ்சியதை உண்ணும் பெருந்தன்மையை அவள் விரும்புவதை எண்ணுகிறான்; அறம் மேற்கொண்டு அதன் மூலம் கடவுளைத் தொழும் வாழ்வை வாய்மைப்படுத்த விழைகிறான்.[6] இங்கு அன்பு, விருந்தோம்பல், அறம், கடவுள் வழிபாடு ஆகிய நான்கும் ஒரே சங்கிலியாக இணைந்துள்ளன. அன்பிலிருந்து அறம்; அறத்திலிருந்து கடவுள் தொழுகை — இதுவே தமிழ் மரபின் அடிப்படைச் சூத்திரம்.[7]

புறத்திணை இலக்கியத்திலும் இதே ஒழுங்கு காணப்படுகிறது. கணியன் பூங்குன்றனார் மனித சமத்துவத்தை அறிவிக்கும்போது, அதனை உணர்வுநிலைச் சமநிலையாகவே கூறுகிறார்:

**“பெரியோரை வியத்தலும் இலமே,**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”**

*— கணியன் பூங்குன்றனார், புறநானூறு 192*

வியத்தலும் இகழ்தலும் இரண்டும் அன்பின்மையின் இரு முகங்கள்; இரண்டையும் கடந்த நிலையே சமநிலை.[8] மேலும், வீட்டுநெறி குறித்த சங்கக் கருத்தும் ஏற்கெனவே வடிவம்

[5] கபிலர், குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டு, அடி 200–210.
[6] குறிஞ்சிப்பாட்டு, வரி 200–210. மேற்கோள்: நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 145.
[7] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 138.
[8] கணியன் பூங்குன்றனார், புறநானூறு, செய்யுள் 192. மேற்கோள்: மேலது, ப. 145.

பெற்றிருந்தது என்பதைக் கோப்பெருஞ்சோழனை எயிற்றியனார் பாடிய பாடல் காட்டுகிறது:

> **“செய்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்,**
> **தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்,**
> **தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்,**
> **மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்,**
> **மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்,**
> **கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டு,**
> **தீது இல் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே”**

*— புறநானூறு 214*

இப்பாடலில் வினை, அதன் பயன், மாறிப் பிறத்தல், பிறவாமை என மெய்கண்ட சாத்திரங்களின் மையச் சொல்லாட்சிகள் அனைத்தும் ஏற்கெனவே தமிழ்ச் சங்கச் செய்யுளில் இடம்பெற்றுவிட்டன.[9] வினைக் கொள்கையும் வீடுபேற்றுக் கருத்தும் தமிழ் மரபுக்கு வெளியிலிருந்து வந்தவை அல்ல என்பதற்கு இதைவிட வலிமையான சான்று வேறில்லை. வாழ்க்கையின் தொடர்ச்சி முறை குறித்த சிந்தனை பௌத்தத் தாக்கத்திற்குப் பின்னும் சமணத் தாக்கத்திற்குப் பின்னும் தமிழகத்தில் தொடர்ந்து விடையிறுத்துக் கொண்டே வந்தது; இம்மை மாறி மறுமை ஆனாலும் நீதான் என் கணவன் என்பது போன்ற குறுந்தொகைப் பேச்சு இதற்குச் சான்று.[10]

### 3. தொல்காப்பியம்: அறமும் மனத்தூய்மையும்

தொல்காப்பியத்தில் இலக்கணமாக வரையறுக்கப்பட்ட இவ்வொழுங்கின் செயல்பாட்டை, அதற்குப் பின்னர் தோன்றிய தமிழ் மரபு இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். ஆண்–பெண் உறவை அவர் இயற்கைக் கட்டமைப்பாக மட்டும் நோக்காமல், ஒருமையின் அடிப்படையில் வரையறுக்கிறார்:

> **“ஒன்றே வேறே என்று இரு பால் வயின்,**
> **ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்,**
> **ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப”**

*— தொல்காப்பியம், களவியல் 2*

ஒன்றே–வேறே எனும் இச்சொல்லாட்சி மிக முக்கியமானது.[11] ஏனெனில் இதே சொல்லாட்சியே பிற்காலத்தில் திருஞானசம்பந்தரால் ஒன்றாய் வேறாய் உடன் ஆனான் என்று இறையியலுக்குப் பயன்படுத்தப்படுகிறது; அதுவே மெய்கண்ட சாத்திரங்களில் அத்துவிதம் எனும் கலைச்சொல்லுக்கு விளக்கமாக அமைகிறது. அகத்திணை

---

[9] கோப்பெருஞ்சோழனை எயிற்றியனார் பாடியது, புறநானூறு, செய்யுள் 214. மேற்கோள்: மேலது, ப. 146.

[10] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 139. ஒப்பிடுக: குறுந்தொகை 49; திருக்குறள் 972.

[11] தொல்காப்பியம், களவியல், நூற்பா 2. மேற்கோள்: மேலது, ப. 146.

இலக்கணத்தில் தொடங்கிய ஒரு சொல் இறையியல் கலைச்சொல்லாக முதிர்ந்த வரலாறு இது.

சிவஞானபோதத்தின் முதல் சூத்திரத்தில் இறைவன் குறித்த கருத்தை முன்வைக்கும் மெய்கண்டார், அதனை வெறுமனே வைதீக வேத–ஆகம மரபின் வழி நிறுவாமல், தமிழின் தொன்மையான இலக்கண-இலக்கிய உரையாடல் மரபில் காணப்படும் "என்மனார் புலவர்" என்னும் அறிவுமரபுத் தொடருடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார் எனக் கருதலாம். தொல்காப்பியம்[12], போன்ற தொன்மையான தமிழ் இலக்கண நூலில் தொடக்கமாகக் காணப்படும் 'என்மனார்' என்ற மரபுத் தொடர், அதற்குப் பின்னர் தோன்றிய இறையனார் களவியல்[13] போன்ற நூல்களிலும் இடம்பெற்று, முன்னோர் புலவர்களின் கருத்தைச் சான்றாக முன்வைக்கும் தமிழறிவியல் மரபைக் காட்டுகிறது. இதே மரபுத் தொடர்ச்சியில் மெய்கண்டார் தமது தத்துவக் கருத்தை நிறுவுவது, சைவசித்தாந்தச் சிந்தனை தமிழ்ச் சிந்தனை மரபின் உள்நிலை வளர்ச்சியாகவும் தொடர்ச்சியாகவும் அமைகிறது என்பதை உணர்த்துகிறது.

இல்லற வாழ்வின் இலக்கணத்தையும் தொல்காப்பியர் அறத்தோடே இணைத்தே வரையறுக்கிறார்:

**"காமம் சான்ற கடைக்கோட் காலை,**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி,**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்,**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**

*— தொல்காப்பியம், கற்பியல் 51*

காமம் நிறைவுற்ற நிலையில், மக்களோடும் அறம் புரியும் சுற்றத்தோடும் சேர்ந்து சிறந்ததைப் பயிற்றுவதே வாழ்வின் இறுதிப் பயன் என்பது இந்நூற்பாவின் பொருள்.[14] அன்பு காமமாகத் தொடங்கி, குடும்ப அன்பாக விரிந்து, சுற்ற அறமாகப் பரவி, பயிற்றல் எனும் சமூகச் செயலாக முடிகிறது. இதுவே அன்பின் விரிவுப் படிநிலை.

மொழி ஒழுக்கத்தையும் அவர் அறவொழுக்கமாகவே காண்கிறார்:

**"இரு திணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்,**
**திரிவில் சொல்லோடு தழாஅல் வேண்டும்"**

*— தொல்காப்பியம், மரபியல் 90*

சொற்களைத் திரிவு இன்றிப் பழக வேண்டும் என்பது மொழி வாழ்வின் இறுதி அறிவுறுத்தலாக அமைகிறது. சொல்லைத் திரிவின்றிப் பயிலல் என்பது சமூக நடவடிக்கைகளில் பிழைபடாமை ஆகும்.[15] மொழியியல் கட்டளையை ஒழுக்கக் கட்டளையாக மாற்றும் இந்நுட்பம் தமிழ் மரபுக்கே உரியது; மொழியைப்

---

[12] தொல்காப்பிய அகத்திணை இயல் நூற்பா 56
[13] இறையனார் களவியல், நூற்பா 1
[14] தொல்காப்பியம், கற்பியல், நூற்பா 51. மேற்கோள்: மேலது, ப. 145.
[15] தொல்காப்பியம், மரபியல், நூற்பா 90. மேற்கோள்: மேலது, ப. 146; விளக்கம்: மேலது, ப. 140.

பயன்படுத்துவதிலேயே உயர்மரபாக இருக்கிறது என்பதைக் கொண்டது தமிழ் மரபு வாழ்வு.

இவை அனைத்தையும் தாங்கி நிற்கும் இறுதி அடிப்படையை, தொல்காப்பியத்தின் இறுதி நூற்பாவின் நிறைவுத் தொடரிலேயே காண்கிறோம். மனத்தின் மாசு அறத் தெரிந்து என்பதே அத்தொடர்.[16] மொழி இலக்கணம், அகத்திணை இலக்கணம், புறத்திணை இலக்கணம், செய்யுள் இலக்கணம் ஆகிய அனைத்தையும் வரையறுத்து முடித்த பின்னர், அவை அனைத்தையும் ஆளும் ஒரே நிபந்தனையாக மனத்தூய்மையை நிறுத்துகிறார் தொல்காப்பியர்.

இது ஆய்வுக்கு மிக முக்கியமான தரவாகும். ஏனெனில் பிற்காலத் திருமுறைகளிலும் மெய்கண்ட சாத்திரங்களிலும் திரும்பத் திரும்ப வரும் நல்லார் எனும் கருத்து — பண்பு சிறந்தவர், அன்புடையவர், நேயம் செய்பவர், உண்மை பின் நிற்பவர் — இதன் நேரடித் தொடர்ச்சியே. மனத்தின் மாசு நீங்குதல் என்னும் நிபந்தனை இல்லாமல் இறையனுபவம் இல்லை என்பதே தமிழ் மரபின் நிலைப்பாடு; அந்நிலைப்பாட்டின் கோட்பாட்டு வேர் சாத்திரங்களில் அல்ல, சாத்திரங்களுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூலிலேயே ஊன்றியிருக்கிறது.

மேலும், காரைக்காலம்மையார் வரலாற்றில் சேக்கிழார் கவனப்படுத்தும் காப்பாகவும் வழுவாத பயிற்சியில் கடவுள் சிந்தனை ஆக, சொல்லும் மனமும் பயன் தருவதாகவும் இணைபதாகவும் அமைந்தமை இதே தொல்காப்பிய நெறியின் நீட்சியே.[17] சொல் திரியாமை, மனம் மாசுபடாமை, செயல் அறம் பிறழாமை — இம்மூன்றும் இணைந்ததே தமிழ் மரபு காட்டும் இறையனுபவத் தகுதி.

### 4. திருக்குறள்: அன்பு எனும் பொருண்மையின் தத்துவ வரையறை

தொல்காப்பியம் இலக்கண வரையறையாகச் சுட்டியதைத் தத்துவ வரையறையாக மாற்றியது திருக்குறள். அன்பு என்பது உயிரின் ஒரு பண்பா, அல்லது உயிரோடு பிரிக்க முடியாத உரிமையா என்னும் கேள்விக்கு வள்ளுவர் தரும் விடையே சைவ சித்தாந்தத்தின் அன்பியலுக்கு அடித்தளம் ஆயிற்று.

> **“அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு**
> **என்போடு இயைந்த தொடர்பு”**
>
> *— திருக்குறள், அன்புடைமை 3*

இக்குறளில், அன்பு உயிருடன் இணைந்திருக்கிற நிலையானது, உயிரானது உடம்பொடு இணைந்திருக்கிற தன்மையைப் போன்றது எனக் கூறப்படுகிறது.[18] அதாவது உயிர்–உடல்

[16] தொல்காப்பியம், மரபியல், நூற்பா 112 (நூலின் இறுதி நூற்பா) — “மனத்தின் மாசு அறத் தெரிந்து”.
[17] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 140.
[18] திருக்குறள், அன்புடைமை 3. விளக்கம்: மேலது, ப. 5.

உறவு எத்தகையதோ, அத்தகையதே உயிர்–அன்பு உறவும். இது வெறும் உவமை அன்று; ஒரு தத்துவ வரையறை. அடுத்த குறள் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது:

> **“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்பு தோல் போர்த்திய உடம்பு”**

*— திருக்குறள், அன்புடைமை 10*

அன்பு இல்லையானால் எஞ்சுவது எலும்பும் தோலும் மட்டுமே; உயிர்நிலை இல்லை.[19] எனவே அன்பு என்பது உயிருக்கு விருப்பத் தேர்வாக அமையும் ஒரு குணம் அன்று; உயிரின் இருப்பையே தீர்மானிக்கும் நிலை.

இவ்விடத்தில் நல்லூர் சா. சரவணன் ஒரு நுட்பமான தத்துவப் பகுப்பை முன்வைக்கிறார். குணம் என்பது உடைமையாகவும் உரிமையாகவும் அமையும். நெருப்பின் தன்மை வெம்மை; இவ்வெம்மை உரிமைக் குணம் — வெம்மை இல்லையேல் அது நெருப்பாக இல்லாத ஒன்றே; இது விட்டு நீங்காத குணம். விறகு ஒரு பொருள்; இப்பொருளில் நெருப்புத் தன்மையும் உண்டு; ஆனால் அதனை அதிலிருந்து பிரித்து எடுக்கிறோம். பிரிக்கப்படும் தன்மை உடைமைக் குணம் ஆகும்; பிரிக்க முடியாதவாறு பொருளாம் தன்மையாக இருப்பதே உரிமைக் குணம் எனப்படும்.[20]

இப்பகுப்பின்படி நோக்கினால், திருக்குறள் அன்பை உயிரின் உரிமைக் குணமாகவே வரையறுக்கிறது. அன்பு உயிரிலிருந்து பிரிக்கப்படக்கூடிய ஒன்று அன்று. மேலும், பண்பு என்ற தமிழ்ச் சொல் நேரடியாகக் குணத்தைக் குறிக்கப் பயன்படுவது அன்று; சமூக அடிப்படையிலான செயல்பாடுகளை விளக்கப் பயன்படுவது.[21] இவ்வேறுபாட்டைக் கவனத்தில் கொள்ளும்போது, பண்புடைமை அதிகாரத்தின் முதல் குறட்பாவே அன்பை மேலுள்ள வழக்காகச் சுட்டுவது தெளிவாகும்:

> **“அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
> **பண்புடைமை என்னும் வழக்கு”**

*— திருக்குறள், பண்புடைமை 2*

இக்குறட்பாவின் வழி பண்பானது மதிப்பீடு செய்யப்பட்டதாக உள்ளதை அறியலாம்.[22] அதாவது அன்பு தனிமனிதனின் உள்நிலை என்றால், பண்பு அதன் சமூக வெளிப்பாடு. உள்நிலையும் வெளிப்பாடும் இணைவதே தமிழ் மரபு காட்டும் முழுமை.

அன்பின் ஆளுமை எல்லையையும் திருக்குறள் விரிவாகவே வரையறுக்கிறது:

> **“அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
> **மறத்திற்கும் அஃதே துணை”**

*— திருக்குறள், அன்புடைமை 6*

---

[19] திருக்குறள், அன்புடைமை 10. விளக்கம்: மேலது, ப. 5.
[20] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 4.
[21] மேலது, ப. 4.
[22] திருக்குறள், பண்புடைமை 2. விளக்கம்: மேலது, ப. 5.

அன்பானது அறம், மறம் எனும் இருவேறு தன்மைகளுக்கும் உடைமையாக ஆவதை இக்குறட்பா விளக்குகிறது. அறம், மறம் இரண்டும் சமூக மதிப்பீடுகள்; இவற்றிற்கும் அன்பு எனும் குணம் உடைமை ஆகிறது.[23] எனவே அன்பு ஒரு குறுகிய உணர்ச்சி அன்று; சமூக நடத்தை முழுவதற்கும் அடிப்படையாக நிற்கும் பொருண்மை.

அன்பின் பயனாக என்ன கிடைக்கிறது என்பதிலேயே இக்கட்டுரையின் மையக் கருத்து அடங்கியுள்ளது:

**“அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு”**

*— திருக்குறள், அன்புடைமை 5*

என்று சொல்லும் நிலைக்குரிய சிறப்பாக அமைவது என்பது இதன் பொருள்.[24] அன்பு இன்பம் என்ற இந்தத் தொடர்பு மிகவும் முக்கியமானது. இதே கருத்தே பிற்காலத்தில் உமாபதி சிவம், “அன்பு நிலையே முத்தி” என்று முத்தி நிலையை விளக்குவதற்கும் அடிப்படையாக அமைந்தது.

அன்பிலிருந்து நட்பு உருவாகும் வழியையும் வள்ளுவர் தெளிவாகவே காட்டுகிறார்:

**“அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பு என்னும் நாடாச் சிறப்பு”**

*— திருக்குறள், அன்புடைமை 4*

அன்பைச் செயற்படுத்துவதன் வழியாக அன்பைப் பெறுகின்ற நிலை உருவாகிறது; இந்நிலையே இன்பம் பெற்றார் எனக் குறிப்பிடப்படும் சிறப்பாக அமைகிறது. எனவே, “அன்பு →இன்பம்” என்ற கருத்துத் தொடர்பு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அன்பு என்பது வெறும் உணர்வாக இல்லாமல், செயலின் வழியாக வெளிப்பட்டு, அதற்குப் பதிலாக அன்பைப் பெறும் போது அது இன்பமாகப் பரிணமிக்கிறது. இவ்வகையில், அன்பிலிருந்து இன்பம் தோன்றும் இந்தச் சிந்தனை, பிற்கால சைவசித்தாந்தச் சிந்தனையில் அன்பின் ஆன்மிகப் பரிணாமத்தைப் புரிந்துகொள்வதற்கும் துணைபுரிகிறது[25]. குறிப்பாக, உமாபதி சிவம் “அன்பு நிலையே அது” என முத்தி நிலையை விளக்கும் கருத்துடன் இதனை ஒப்பிட்டு நோக்கலாம். மேலும், அன்பு தனிமையான உணர்வாக நிற்காமல், பிறருடன் ஏற்படுத்தும் உறவின் வழியாக நட்பாக வளர்கின்றது என்பதையும் வள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

உயிரற்ற பொருள்கள் மீதான அன்பின் செயல்பாட்டை வேறொரு சொல்லால் வள்ளுவர் குறிக்கிறார் — அருள்:

**“அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு”**

---

[23] திருக்குறள், அன்புடைமை 6. விளக்கம்: மேலது, ப. 6.

[24] திருக்குறள், அன்புடைமை 5. விளக்கம்: மேலது, ப. 6.

[25] திருக்குறள், அன்புடைமை 4. விளக்கம்: மேலது, ப. 7.

*— திருக்குறள், பொருள்செயல்வகை 7*

இக்குறட்பா அருளை அன்பின் செயல்பாடாக விளக்குகிறது. அன்பானது பெற்றெடுத்த குழந்தைதான் அருள் என்பது; இந்த அருளை வளர்த்தெடுக்கும் செவிலித்தாய்தான் பொருள் என்று கூறப்படுகிறது.[26] அருள் என்ற சொல்லைப் பிற்காலத்தில் பரம்பொருளின் தன்மையைச் சுட்டும் சொல்லாகவே பழக்கப்படுத்தி விட்டனர்; ஆனால் அருள் என்பது அன்பின் விரிவாகவே திருக்குறள் விளக்குகிறது.[27]

இது ஆய்வுக்கு மிக முக்கியமான திருப்புமுனை. ஏனெனில் மெய்கண்ட சாத்திரங்களில் திருவருள் என்பது முழு அமைப்பையும் இயக்கும் மையக் கருத்தாக நிற்கிறது; திருவருட்பயன் என்னும் நூலின் பெயரே அதைச் சுட்டுகிறது. அவ்வருள் எங்கிருந்து வந்தது என்று கேட்டால், திருக்குறள் தரும் விடை — அன்பிலிருந்து. அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருள். எனவே சாத்திரங்களின் அருள்–கோட்பாடு தமிழ் அறமரபின் நேரடி வழித்தோன்றல் ஆகும்.

இதே வரிசையில் நன்றி எனும் கருத்தும் இணைகிறது. உதவியின் செயல்பாட்டை வைத்து நன்றி என்பதைச் சொல்லலாம்; பொருள் அழுத்தம் பெறுகிறது என்று கூடச் சொல்லலாம்.[28] நன்றியின் வேறுபாட்டை விவரிக்கும் வகையில்,

> **“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொன்ற மகற்கு”**

*— திருக்குறள், செய்ந்நன்றி அறிதல் 10*

என்று கூறப்படுகிறது. செய்ந்நன்றிக்கு வேறாக நன்றி என்பதை நயம், நட்பு முதலியவற்றோடு இணைத்துக் காணும்போதுதான் நன்றிக்கும் அன்புக்கும் உள்ள தொடர்பு தெளிவுபடும்.[29] நன்றியும் நயனும் இணைந்த ஒரு மதிப்பீட்டை உலகு பாராட்டும் என்று திருக்குறள் முன்மொழிகிறது:

> **“நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
> **பண்பு பாராட்டும் உலகு”**

*— திருக்குறள், பண்புடைமை 4*

நன்றி என்ற ஒன்று தனியாக அப்பயனை அளிக்கவில்லை; நயனுடன் சேர்ந்து நன்றியானது வழங்குகிற ஒரு பயனே உலகு பாராட்டக்கூடிய மதிப்பீடு எனும் தன்மையையும் விளக்கப்படுத்தியது.[30] நயம் என்பது நட்பொடு தொடர்பு கொண்டிருக்கும் தன்மை என்பதனை விளக்கும் குறட்பாக்கள் தொடர்கின்றன:

> **“நண்பு ஆற்றார் ஆகி நயம் இல செய்வார்க்கும்**
> **பண்பு ஆற்றார் ஆதல் கடை”**

---

[26] திருக்குறள், பொருள்செயல்வகை 7. விளக்கம்: மேலது, ப. 8.
[27] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 8.
[28] மேலது, ப. 13.
[29] திருக்குறள், செய்ந்நன்றி அறிதல் 10. விளக்கம்: மேலது, ப. 13.
[30] திருக்குறள், பண்புடைமை 4. விளக்கம்: மேலது, ப. 13.

*— திருக்குறள், பண்புடைமை 8*

**“பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயன் உடையான்கண் படின்”**

*— திருக்குறள், ஒப்புரவறிதல் 6*

நயன் உடையவனின் செல்வம் ஊர் நடுவில் பழுத்த பயன் தரும் மரம் போன்றது என்பது இக்குறட்பாவின் பொருள்.[31] செய்யவேண்டியவற்றைச் செய்யமுடியவில்லையே என்று நயன் உடையவன் வருந்தும் காலந்தான் அவனுக்கு வறுமை என்று கூறுகிறது மற்றொரு குறள்:

**“நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல்செயும் நீர**
**செய்யாது அமைகலா வாறு”**

*— திருக்குறள், ஒப்புரவறிதல் 9*

இவை அனைத்தையும் ஒருங்கே நோக்கும்போது, அன்பு →ஆர்வம் →நட்பு →நயம் →நன்றி → பண்பு எனும் ஒரு முழுமையான சமூக ஒழுங்கை வள்ளுவர் வகுத்திருப்பது தெளிவாகும்.[32] இவ்வொழுங்கின் அடித்தளத்தை அவரே சுட்டுகிறார்:

**“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்”**

*— திருக்குறள், ஒழுக்கமுடைமை 8*

நல்லொழுக்கம் நன்றிக்கு விதை; நன்றி நயத்தோடு இணைந்து பண்பாகிறது; பண்பே உலகு பாராட்டும் மதிப்பீடு.[33] இங்கு தொல்காப்பியத்தின் மனத்தின் மாசு அறத் தெரிந்து எனும் நிபந்தனையும், திருக்குறளின் நல்லொழுக்கம் எனும் விதையும் ஒரே கருத்தையே வெவ்வேறு சொற்களில் சுட்டுகின்றன. மனத்தூய்மை →நல்லொழுக்கம் →அன்பு →அருள் — இதுவே தமிழ் மரபின் நெறிக்கோடு.

### 5. பன்னிரு திருமுறைகள்: அன்பு அனுபவமாதல்

திருக்குறள் வரையறுத்த அன்பு, திருமுறைகளில் அனுபவமாக மாறுகிறது. வரையறை என்பது அறிவின் செயல்; அனுபவம் என்பது உயிரின் செயல். இம்மாற்றத்தை நிகழ்த்திய முதல் அருளாளர் காரைக்காலம்மையார் ஆவார்.

அம்மையாரின் தனிச்சிறப்பு, இறையனுபவத்தை எந்த நிபந்தனையும் இன்றி அன்பின் அடிப்படையிலேயே நிறுவியதுதான்:

**“இடர் களையா ரேனும் எமக்கு இரங்கா ரேனும்**
**படரும் நெறி பணியா ரேனும் - சுடர் உருவில்**
**என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு**
**அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு”**

---

[31] திருக்குறள், ஒப்புரவறிதல் 6. விளக்கம்: மேலது, ப. 14.
[32] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 14–15.
[33] திருக்குறள், ஒழுக்கமுடைமை 8. விளக்கம்: மேலது, ப. 17.

*— காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி 2*

எம்முடைய துன்பங்களை நீக்கவில்லை என்றாலும், எங்கள் மீது இரக்கப்படவில்லை என்றாலும், நாங்கள் செல்லவேண்டிய வழியைக் காட்டாதவர் என்றாலும், சுடர் உருவமாக நடமாடும் எம் கடவுள் மீது என் அன்பு இடைவிடாமல் செயல்படும்; என் நெஞ்சும் அவருக்கே உரியது என்று கூறுகிறார் அம்மையார்.[34] பயனை எதிர்பாராத அன்பு — இதுவே அன்பின் தூய வடிவம். இது பேரம் அல்ல, உரிமை.

அம்மையாரின் மிக முக்கியமான பங்களிப்பு பேரன்பு எனும் சொல்லாட்சியைத் தமிழ் மரபுக்கு அளித்ததாகும்:

**"மகிழ்ந்தி மட நெஞ்சே மானுடநில் நீயும்
திகழ்ந்தி பெருஞ் சேமம் சேர்ந்தால் - இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துஅழல்வார்க்கு ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு"**

*— காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி 31*

இப்பாடலில் அம்மையார் அற்புதத் திருவந்தாதி நெஞ்சுக்குக் கட்டளையிடுகிறார்: பேரன்பை இன்னும் பெருக்கு. இடர்களில் இருக்கும் நிலையில் அன்பு உறவை உறுதியாகப் பெற்று முயற்சிக்கும் நிலை முதலாவது; இதற்குப் பின், நாம் பேரன்பால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்வோம்.[35] அன்பு வேறு, பேரன்பு வேறு. அன்பு மனிதப் பிறவியின் நிலை; பேரன்பு அவ்வேறுபாட்டு நிலை உணரப்பட்ட பிறவித் தன்மையில்தான் விளங்கத் தொடங்கியபோது அன்பே தானே பெருகுவதாகிறது.

அம்மையார் அற்புதம் என்ற பொருளில் சிவன் என்ற பெயரால் எண்ணமான கடவுளுக்குச் சுட்டினார்; பெண்–ஆண் இணைப்பில் கூர்மைப்பட்ட அன்பை உயர்த்திப் பேரன்பு என்பதைக் குடும்ப அன்பை காட்டுமாறு இயக்கினார்.[36] இவ்வரலாற்றுத் திருப்பத்தைச் சேக்கிழார் மிகத் தெளிவாகப் பதிவு செய்கிறார்:

**"கை வரு கற்புடை நெறியால் கணவன் உரை காவாமை, மெய்
வழி அன்று என விளம்பல் விட மாட்டார் விதிர்ப்புறுவார்"**

*— பெரியபுராணம், காரைக்காலம்மையார் புராணம் 27*

காப்பாகவும் வழுவாத பயிற்சியில் கடவுள் சிந்தனை ஆக, சொல்லும் மனமும் பயன் தருவதாகவும் இணைவதாகவும் அமைந்தமை இங்கு உணரத்தக்கது.[37] தொல்காப்பியர் சுட்டிய திரிவின்றிச் சொல் பயிலல் எனும் நெறி, அம்மையார் வாழ்வில் நடைமுறையாக நிகழ்ந்ததை இப்பாடல் காட்டுகிறது.

---

[34] காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி 2. விளக்கம்: மேலது, ப. 11.
[35] காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி 31. விளக்கம்: மேலது, ப. 12.
[36] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 140.
[37] சேக்கிழார், பெரியபுராணம், காரைக்காலம்மையார் புராணம் 27. மேற்கோள்: மேலது, ப. 146; விளக்கம்: மேலது, ப. 140.

அம்மையாரைத் தொடர்ந்து நாயன்மார்கள் சைவத்தை இயக்கினர்.[38] திருஞானசம்பந்தர் அன்பையும் நன்றியையும் இணைத்து ஒரு வாழ்வியல் நெறியாக்குகிறார்:

**“நன்றியால் வாழ்வது உள்ளம்**
**உலகுக்கு ஒரு நன்மையாலே**
**கன்றினார் மும்மதிலும்**
**வரையே சிலையாய்**
**பொன்றினார் வார்சுடலை பொடிநீறு**
**அணிந்தார் அழல்அம்பு**
**ஒன்றினால் எய்த பெம்மான்**
**உறையும் இடம் ஒற்றியூரே”**

*— திருஞானசம்பந்தர் தேவாரம் 3-57-7*

உயிர் (உள்ளம்) வாழ்வது என்பது உலகுக்கு நன்மை தரும் கொள்கை உறுதிப்பாட்டால்தான் என்பதே நன்றியால் வாழ்வது என்பதன் பொருள். அதற்கு அடையாளமாக இறைவன் செய்தது மூன்று மதில்கள் எனப்படும் மும்மலங்களை அழித்தது; மூன்று மதில்களையும் அழித்த சிவபெருமான் இருக்கும் இடம் ஒற்றியூர் என்பது அப்பாடலின் கருத்து.[39] ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மூன்று மலங்களை அழிக்கிற பெருமானின் செயல்பாடுதான் உயிர் வாழ்வு; இந்தப் பரம்பொருளின் செயல்பாடே பெருமானின் நன்றி ஆகும். இந்த நன்றி புரிந்த பயனாக நம் வாழ்வு அமைந்திருக்கிறது என்பதை உணர்வதே அன்பை உணர்தல்.

திருஞானசம்பந்தரின் மற்றொரு பங்களிப்பு, தொல்காப்பியத்தின் ஒன்றே–வேறே எனும் அகத்திணைச் சொல்லாட்சியை இறையியல் சொல்லாட்சியாக மாற்றியதுதான்:

**“ஒன்றாய் வேறாய் உடன் ஆனான்”**

*— திருஞானசம்பந்தர், திருவீழிமிழலைத் தேவாரம்*

இத்தொடர் மிகச் சுருக்கமானது; ஆனால் இதுவே பிற்காலச் சைவ சித்தாந்தத்தின் அத்துவிதக் கோட்பாட்டின் முழு வரையறையாக நிற்கிறது.[40] பொருள் இணைப்பால் ஒன்றாய், பொருள் தன்மையில் வேறாய், பொருளை இயக்குவதில் உடனாய் இருப்பதான உறவுநிலை என்பதே சாத்திரங்கள் தரும் விளக்கம். சிவஞானபோதத்தின் இரண்டாம் நூற்பாவுக்குச் சிவஞான முனிவரின் விளக்கமும் இதனையே சுட்டுகிறது.

திருநாவுக்கரசர் அன்பின் பெருக்கத்தையே வாழ்வின் நோக்கமாக்குகிறார்:

**“என் அன்பு ஆலிக்குமாறு கண்டுஇன்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவி”**

*— திருநாவுக்கரசர் (5 - 1 - 1)*

[38] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 137.

[39] திருஞானசம்பந்தர் தேவாரம் 3-57-7. விளக்கம்: மேலது, ப. 16.

[40] திருஞானசம்பந்தர், திருவீழிமிழலைத் தேவாரம். மேற்கோள்: மேலது, ப. 146. ஒப்பிடுக: சிவஞானபோதம், நூற்பா 2-க்குச் சிவஞான முனிவர் தந்த விளக்கம்.

அன்பு ஆலித்துப் பெருகுவதைக் கண்டு இன்புறுவதற்கு இப்பிறவி இன்னும் இடம் தருமா என்று வினவுவது, பிறவியின் பயனையே அன்பின் பெருக்கமாகக் கணிக்கும் நிலைப்பாடு.[41] சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதே உரிமை உணர்வோடு பேசுகிறார்:

**“அழுக்கு மெய்கொடு உன் திருவடி அடைந்தேன்**
**அதுவும் நான் படப் பாலது ஒன்றானால்**
**பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்**
**பிழைப்பன் ஆகிலும் திருவடிப்பிழையேன்**
**வழுக்கி வீழினும்திருப்பெயர் அல்லால்**
**மற்று நான் அறியேன் மறுமாற்றம்”**

*— சுந்தரர், திருவொற்றியூர் 7-54-1*

நயத்துக்குச் சுந்தரர் எனும் வழக்கு உண்டு; நயத்துடன் இணைந்தே தோழமை நெறி விளங்க நின்றார் அவர்.[42] பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன் என்னும் தொடர் ஒரு நண்பனின் மொழி; அடிமையின் மொழி அன்று. இது அன்பு உரிமையாக முதிர்ந்த நிலையின் அடையாளம்.

மாணிக்கவாசகர் அண்டப் பரப்பையே ஆய்வுக்கு உட்படுத்தி, உயிரின் பரிணாமத் தொடர்ச்சியை அன்பின் நிலையிலிருந்து விளக்குகிறார்.[43] புல் முதலான பரிணாமமாக விளக்கிக் கொள்ளும் கொள்கையின் தொடக்கம் அவரிடமே காணப்படுகிறது. இதுவே பின்னாளில் வள்ளலாரால் விரிவு செய்யப்பட்டது.

இப்பரிணாமத்தின் உச்சத்தைத் திருமூலர் தமது நூலில் ஒரே தொடரால் அறிவிக்கிறார் — அன்பே சிவம். இதற்கு முன்னதாக அவர் அன்பின் பொருண்மையை மிக விரிவாக வரையறுக்கிறார்:

**“அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும்**
**இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்**
**முன்புறு காலமும் ஊழியுமாய் நிற்கும்**
**அன்புற ஐந்தின் அமர்ந்து நின்றானே”**

*— திருமந்திரம், இரண்டாம் தந்திரம் (10 - 06)*

இறைவன் எல்லாப் பொருள்களிலும் புகுந்து நிற்பான்; அவனே சில பொருள்களாகவும் ஆகியும் நிற்பான்; வியாபகமாய், வியாப்பியமாய் நிற்றல் போலப் பொருள்களாகவும் மாறி நிற்கும் தன்மை கடவுளுக்கு உண்டு. இத்தன்மையைக் கூறி அன்பின் அடிப்படையிலான ஒரு தனிப் பொருண்மையாக இறைவனை நிறுத்துகிறார்.[44] அன்பாக ஆகி நிற்கும் இறைவனின் அமைப்பு ஒன்று; அன்பைப் பெறவைக்கும் இறைவனின் அமைப்பு ஒன்று. ஐந்தாகக் கூறப்படுவன சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்து; இவை முறையே

---

[41] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 12.
[42] சுந்தரர், திருவொற்றியூர்த் தேவாரம் 7-54-1. விளக்கம்: மேலது, ப. 15–16.
[43] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 142. காண்க: மாணிக்கவாசகர், திருவாசகம் — திருஅண்டப்பகுதி, போற்றித் திருஅகவல் (மேலது, ப. 146).
[44] திருமூலர், திருமந்திரம், திதி 6. விளக்கம்: மேலது, ப. 9.

வாய், கண், மெய், செவி, மூக்கு எனும் புலன்களைச் சார்ந்த வகையில் அமைவன. அன்பாக ஆகி நிற்கும் கடவுளே அன்பைப் பெற வைக்க ஐந்தாகவும் ஆகி இருக்கிறான் என்பது இதன் பொருள்.[45]

வடநாட்டிலிருந்து வந்த திருமூலர் அன்பே சிவம் ஆவது என்றார்; ஆண்–பெண் உறவு, ஒழுக்கம், அன்பு, பேரன்பு என்ற நோக்குகளில் வாழ்வியல் செழுமையாகத் தமிழர் தத்துவங்களில் சமய இயலாகிக் கூர்மைப்பட்டது.[46] திருமூலர், இந்திய மரபுத் தத்துவங்களின் கருத்துகளை இணைத்து சைவக் கொள்கையை விளக்கினார். தொடர்ந்து, நாயன்மார்கள் சைவத்தைப் பக்தி நெறியாக மக்களிடம் கொண்டு சென்று வளர்த்தனர்.

**6. மெய்கண்ட சாத்திரங்கள்: அன்பு கொள்கையாதல்**

திருமுறைகளில் அனுபவமாக நின்ற அன்பு, மெய்கண்ட சாத்திரங்களில் கொள்கை வடிவம் பெறுகிறது. இம்மாற்றத்திற்கான வரலாற்றுச் சூழலை நல்லூர் சா. சரவணன் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இராசேந்திர சோழனுக்குப் பிறகு தத்துவ ஒருமைச் சிக்கலால் மொழிக் கலப்பில் சைவம் வளர்த்தெடுக்கப்பட்டது; அச்சூழலில் அதனைத் தனித் தத்துவ ஆக்கமாகத் தூக்கி நிறுத்தினார் மெய்கண்டார். அவரை ஒட்டி ஆகம வகையில் விரித்தார் அருணந்தி சிவாசாரியார் எனும் சகலாகம பண்டிதர்; பின்னர் மறைஞான சம்பந்தர் மரபில் வேதாந்தத் தெளிவாகச் சைவ சித்தாந்தத் திறனை விவரித்தார் உமாபதிசிவம்.[47]

மெய்கண்டார் தமது சிவஞானபோதத்தின் முதல் நூற்பாவிலேயே ஆண், பெண், உலகம் (அது) ஆகியன சுட்டித் தத்துவ ஆராய்ச்சியைத் தொடங்குகிறார்:

> **“அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்,**
> **தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்,**
> **அந்தம் ஆதி என்மனார் புலவர்”**

*— சிவஞானபோதம், நூற்பா 1*

இத்தொடக்கம் தற்செயலானது அன்று.[48] ஆண், பெண், அது எனும் மூவகைப் பகுப்பு தமிழ் இலக்கண மரபின் திணை–பால் பகுப்பிலிருந்தே வருகிறது. தொல்காப்பியர் இரு திணை ஐம்பால் என வகுத்ததன் நேரடித் தொடர்ச்சி இது. மெய்கண்டார் தமிழ் இலக்கணக் கருவியையே தத்துவக் கருவியாக மாற்றுகிறார் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

இரண்டாம் நூற்பாவில் உயிரின் ஆளுமையை நிலைநிறுத்துகிறார்:

> **“அவையே தானே ஆய் இரு வினையின்,**
> **போக்கு வரவு புரிய ஆணையி நீக்கம் இன்றி நிற்கும் அன்றே”**

---

[45] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 10.
[46] மேலது, ப. 141.
[47] மேலது, ப. 137.
[48] மெய்கண்டதேவர், சிவஞானபோதம், நூற்பா 1. மேற்கோள்: மேலது, ப. 146.

*— சிவஞானபோதம், நூற்பா 2*

உயிரை அடிமையாகக் கொள்ளாமல் அதன் ஆளுமை ஆக்கமாக, அதனதன் எண்ணத்தின் வழி படிப்படியாக உயர்வு பெறச் செய்யும் முறையை வினைக் கொள்கையாக விளக்கியது சைவ சித்தாந்தம்.[49] இது மிக முக்கியமான நிலைப்பாடு. உயிர் அடிமை அன்று; ஆளுமை உடையது. அதன் ஆளுமையை மறுக்காமல், அதன் எண்ணத்தின் வழியேயே அதனை உயர்த்துவதே இறைவனின் செயல். இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் சேக்கிழாரும் கூறுகிறார்:

**"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்,**
**மெய் வகையால் நான்கு ஆகும் விதித்த பொருள்"**

*— பெரியபுராணம் 3645*

பொருள்களில் இணைந்து நிற்கிற கடவுள் நிலையை அத்துவிதம் என்ற கலைச்சொல்லுக்கு விளக்கமாக அமைத்து, பொருள் இணைப்பால் ஒன்றாய், பொருள் தன்மையில் வேறாய், பொருளை இயக்குவதில் உடனாய் இருப்பதான உறவுநிலை என விளக்கியது சைவ சித்தாந்தம்.[50] இவ்வரையறை திருஞானசம்பந்தரின் ஒன்றாய் வேறாய் உடன் ஆனான் எனும் தொடரின் சொல்லுக்குச் சொல் விரிவாகவே அமைந்துள்ளது என்பது ஆய்வுக்குரிய முக்கியத் தரவு.

இனி, இக்கட்டுரையின் மையச் சான்றுக்கு வருவோம். சிவஞானபோதத்தின் பதினொன்றாம் சூத்திரம் அன்பையே அறிதலின் கருவியாக நிறுவுகிறது:

**"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்**
**காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா அன்பின் அரன்கழல் செலுமே"**

*— சிவஞானபோதம், சூத்திரம் 11*

இந்நூற்பாவின் அமைப்பு மிக நுட்பமானது. சிவபரம்பொருளானது (அரன்) அயராத அன்பு செய்துகொண்டிருக்கும் தன்மையது. கண்ணுக்குள் பொருள்களைப் புலப்படுத்துவது உளம்; அதுபோலவே ஆன்மாவைக் கண்டு காட்டுகிறான் இறைவன். இவ்வாறு அயர்வில்லாமல் அன்பைச் செய்பவனாக இருக்கிறான் என்பதும், அயரா அன்பு செய்யும் அரனின் திருவடிக்கு ஆன்மா செல்லும் என்பதும் கூறப்பட்டன.[51]

இச்சூத்திரத்தில் அடங்கியுள்ள அறிவியல் நுட்பம் இதுவே: பொருள் கண்ணுக்குப் புலப்படுகிறது; ஆனால் அப்பொருளைக் காட்டுவது கண் அன்று, உள்ளம். அதுபோலவே, உள்ளத்தைக் காட்டுவது உள்ளம் அன்று, இறைவன். எனவே அறிதலின் ஒவ்வொரு படியிலும் ஒரு காட்டுவோன் இருக்கிறான். அக்காட்டுதலின் இயல்பு என்ன? அயரா அன்பு. அதாவது கடவுளின் செயல்முறையே அன்பு.

---

[49] சிவஞானபோதம், நூற்பா 2. மேற்கோள்: மேலது, ப. 146; விளக்கம்: மேலது, ப. 141.
[50] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 141. சேக்கிழார், பெரியபுராணம், பாடல் 3645 (மேலது, ப. 146).
[51] சிவஞானபோதம், சூத்திரம் 11. விளக்கம்: மேலது, ப. 30.

இங்குதான் தமிழ் மரபின் மிகப்பெரிய தத்துவத் திருப்பம் நிகழ்கிறது. சங்க காலம் தொடங்கி நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் என்று கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டே தமிழ்க் குடி தன் ஆராய்ச்சியை நடத்தி வந்தது.[52] அவ்வாராய்ச்சி இறுதியில் சென்று சேர்ந்தது கண்ணுக்குப் புலப்படாத ஒரு பொருண்மையில் — அன்பு. கண்ணுக்குத் தெரியும் பொருளிலிருந்து தொடங்கிய தேடல், கண்ணுக்குத் தெரியாத அன்பையே அறிதலின் கருவியாக நிறுவி முடிகிறது. பொருள்முதல் நோக்கிலிருந்து தொடங்கிய தமிழ் ஆராய்ச்சி, அன்பு எனும் கருத்துமுதல் நிலையை அடையாளம் கண்டு, அதனையே கடவுளை அறியும் ஒரே கருவியாக முன்வைத்தது என்பதே இவ்வாய்வின் மையக் கண்டுபிடிப்பு.

இதே கருத்து சிவஞானபோதத்தின் பன்னிரண்டாம் சூத்திரத்தின் உதாரண வெண்பாக்களில் மேலும் தெளிவுபடுத்தப்படுகிறது:

> **“அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே**
> **அத்துவிதி அன்பின் தொழுமே”**
>
> *— சிவஞானபோதம், வெண்பா 12-4-1*

அது இது என வேறுபட்டு அறிவதும் இல்லாத இறைவனுடன் நிலாது, அது இது எனச் சுட்டி ஆன்மாவுக்கு உலகமே தெய்வமாக இணைந்து இணைப்பைக் காட்சிப்படுத்தும் அத்துவிதியாக உலகையும் அன்பின் தொழுவதாகவும் காட்சிப்படும் என்பது அவ்வெண்பாவின் பொருள்.[53] அத்துவித நிலையை அடைந்தவனுக்கு உலகம் முழுவதுமே தெய்வமாகத் தெரிகிறது; அவன் உலகையே அன்போடு தொழுகிறான். இது சைவ சித்தாந்தத்தின் சமூகப் பரிமாணம்.

> **“வினையால் அசத்து விளைதலால் ஞானம்**
> **வினை தீரின் அன்றி விளையா - வினைதீர**
> **ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்**
> **ஆனத்தால் அன்பின் தொழு”**
>
> *— சிவஞானபோதம், வெண்பா 12-4-2*

உலகப் பொருள்களுடனான பழக்கத்தில் விளைவது அசத்து நிலை; மாறி மாறி அமையும் தன்மையே அசத்து நிலை எனப்படும். ஞானம் உண்டாவதற்கு உலகப் பொருள்களின் அனுபவத்திலிருந்து நீங்க வேண்டும்; அதற்கு ஞானத்தை விரும்பி அன்பினால் செயல்பட வேண்டும் என அறிவுறுத்துகிறது இவ்வெண்பா.[54] நீக்கமும் மாற்றமுமாக அமையும் பழக்கங்களின் நிலையானது மாற வேண்டும்; அதற்கு அன்பைச் செயற்படுத்த வேண்டும். இதுவே நட்பு செய்தல் என்பது. தொடக்கத்தில் அன்பை உடைமையாகச் செயற்படுத்துவதே இயலக்கூடியது; பின்னர் அன்பானது ஆலித்து ஆலித்துப் பெருகிட நட்பானது உரிமையாவது ஆகும்.

---

[52] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 138.

[53] சிவஞானபோதம், உதாரண வெண்பா 12-4-1. விளக்கம்: மேலது, ப. 32.

[54] சிவஞானபோதம், உதாரண வெண்பா 12-4-2. விளக்கம்: மேலது, ப. 32.

உடைமையிலிருந்து உரிமைக்கு நகர்தல் — இதுவே சைவ சித்தாந்தம் காட்டும் சாதனை நெறி. திருக்குறள் வகுத்த உடைமை–உரிமை வேறுபாடு இங்கு நேரடியாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது கவனிக்கத் தக்கது.

இத்தொடர்ச்சியின் நிறைவை உமாபதி சிவத்தின் திருவருட்பயனில் காண்கிறோம். முத்தி என்றால் என்ன என்னும் கேள்விக்கு அவர் தரும் விடை மிகச் சுருக்கமானது:

> **“இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம்**
> **அன்பு நிலையே அது”**

*— உமாபதி சிவம், திருவருட்பயன் 80*

இன்பத்தை இனிது என்பதாகவே அனுபவிப்பது என்பது அன்பு அனுபவிப்பதுதான் என்று குறிப்பிடப்படுகிறது.[55] முத்தி என்பது வேறோர் இடம் அன்று; வேறோரு காலம் அன்று; அன்பு நிலையே அது. இது தமிழ் மரபின் மிகத் தனித்துவமான முடிபு. வீடுபேறு என்பது அன்பின் நிறைவு நிலை என்று வரையறுப்பது தமிழ்ச் சாத்திர மரபுக்கே உரியது.

இதனை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் அடுத்த குறள் அமைகிறது:

> **“ஓங்கு உணர்வின் உள்அடங்கி உள்ளத்து இன்பு ஒடுங்கத்**
> **தூங்குவர் மற்று ஏது உண்டு சொல்”**

*— உமாபதி சிவம், திருவருட்பயன் 91*

ஆன்மா இறைவனின் உணர்வுள் அடங்கி இருக்கும்; ஆன்மாவின் உள்ளே இன்பம் அடங்கி இருக்கும் என்பது இறைவனும் ஆன்மாவும் இணைந்த நிலை. இதனை ஒரு பொருளனுபவம் என விளங்கிக்கொள்ள வேண்டும்.[56] ஆன்மாவானது இறைவனின் உணர்வை விளிம்பு எல்லையாகக் கொண்டது; இறைவன் தரும் இன்பம் ஆன்ம உணர்வை விளிம்பு எல்லையாகக் கொண்டது. இந்த இரண்டாவது பகுதிதான் அன்பு எனும் பொருளை அடையாளம் காட்டுகிறது. இதுவே அன்பினால் இன்பம் ஆவதை அனுபவிக்கும் நிலை; இதுவே அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் நிலை.

ஆன்மாவானது பரம்பொருளுடன் இணைந்த நிலையை முழுமையாகக் காட்டிக் கொண்டிருப்பது அன்பு. அன்பை அடிப்படையாகக் கொண்டே ஆன்மா அத்துவிதி எனும் பெயரையும் பெறுகிறது; இவ்வகையில் அன்பை அத்துவிதி அன்பு என்றே அன்புக்கு ஒரு அடையாளமும் பெயரும் கிட்டுகிறது.[57] எனவே சைவ சித்தாந்தத்தின் மைய்க் கலைச்சொல்லாகிய அத்துவிதம் கூட, இறுதியில் அன்பையே வரையறுக்கும் சொல்லாக நிற்கிறது.

### திருமுறை தெளிவு — சிவஞானபோதம்

முனைவர். வை. இரத்தினசபாதி அவர்கள் பன்னிரு திருமுறைகளையும் மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்தையும் ஒரே தத்துவ மூலத்திலிருந்து பிறந்தவை என நிறுவும்

---

[55] உமாபதி சிவாசாரியார், திருவருட்பயன் 80. விளக்கம்: மேலது, ப. 30.
[56] உமாபதி சிவாசாரியார், திருவருட்பயன் 91. விளக்கம்: மேலது, ப. 31.
[57] நல்லூர் சா. சரவணன், மேலது, ப. 31.

இணைப்புச் சிந்தனை நூலாகும்[58]. "திருநெறிய தமிழ்" என்பது பன்னிரு திருமுறைகளுக்குரிய பெயராகக் கொள்ளப்பட வேண்டும் என்பது ஆசிரியரின் அடிப்படைக் கொள்கை.

"தமிழ்" = சிவானந்தப் பேறு: திருமுறைகளில் அருளாளர்களால் பயன்படுத்தப்படும் "தமிழ்" என்ற சொல் வெறும் மொழியின் பெயர் மட்டுமன்று; "திருநெறிய தமிழ்" என்பதன் பொருள் சிவானந்தப் பேறே என ஆசிரியர் தீர்மானிக்கிறார். காரைக்காலம்மையாரே இச்சொல்லாட்சியை முதன்முதலில் வெளிப்படுத்தியவர்.

வழிமொழி எனும் கருத்தாக்கம்: ஞானசம்பந்தர் தம் பாடல்களையே "வழிமொழிகள்" என்று சுட்டியிருப்பது — அருளாளர் தமிழை இறைவன் அளித்த மொழியை வழிநின்று வெளிப்படுத்தும் நிலையாகவே கருதினர் என்பதற்குச் சான்று.

மூல ஒலித் தத்துவம் — நமசிவாய: "ஓம்" எனும் பிரணவ ஒலியின் விரிவே "நமசிவாய"; இது மனித உடம்பின் அமைப்பை உணர்த்தும் கரு/உரு எனக் கொள்ளப்படுகிறது. காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் "ஓ" ஒலியுடன் தகர மெய்யையும் இணைத்துப் பாடியது இதன் தமிழ் மரபு அடித்தளம்.

தந்தை-தாய் உருவகம் — பொதுமை நிலை: நக்கீரர் திருவாக்கு "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ" வழி, இறைவனை அப்பன்-அம்மை என ஒருங்கே காணும் பொதுமை நிலை விளக்கப்படுகிறது. "ஒருவர்" எனும் சொல் ஆண்-பெண் இணைந்த கோலத்தையே குறிக்கும் என்பதை குமரகுருபரர் மேற்கோள் காட்டி நிறுவுகிறார்.

குனியவலமாம் அடிமை (அத். 2): இறைவன் அடியவனுக்குத் தானே அடிமையாக மாறும் நிலை — "ஆண்டான் அடியவனுக்கு அடியவனாம் நிலையில் வந்து அமைந்துவிடுகிறான்" என மாணிக்கவாசக திருவாசகம் "தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" மேற்கோள் காட்டப்படுகிறது. காரைக்காலம்மையார் இதைத் "தாழ்வெனுந் தகவு" என்று சிறப்பித்தார்.

தமிழ் வழக்கு = உலகப் பொதுமை: தொல்காப்பிய நூற்பா "நாலா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்" அடிப்படையில், "தமிழ் வழக்கு" உலகத் தழுவிய பொதுமையைக் கொண்டது என நிறுவப்படுகிறது; சேக்கிழார் இதனை "ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்" என்றும், தொல்காப்பியர் தெய்வத்தைக் கருப்பொருளாகவே ("தெய்வம் உணாவே மாமரம்...") வைத்துக் கட்டுகிறார் என்றும் விளக்குகிறார்.

[58] முனைவர். வை. இரத்தினசபாபதி, சென்னைப் பல்கலைக்கழகம் (முதற் பதிப்பு 1979, இரண்டாம் பதிப்பு 2004) — பக். 1–33 சுருக்கம்

**7. வளர்ச்சியின் தொடர் நிலைகள்: பிற்காலப் போக்குகள்**

மெய்கண்ட சாத்திரங்களுடன் இவ்வளர்ச்சி நின்றுவிடவில்லை. குகையிடிக் கலகம் (கி.பி. 1200-இல் தமிழகத்தில் நடந்தது) போன்றவற்றால் சிவாலயங்களிலும் சைவ இலக்கியங்களிலும் பிரிவினைகள் மோதின. வேற்றுமைகளிலிருந்து சைவத்தை மீட்க அருணகிரிநாதர் (கி.பி. 14–15) புரட்சியாளராகச் சிவாலயங்களில் முருகனையும் இணைத்து, முருகன்/குமரன் தலைமையில் சைவத்தை இயக்கினார்.[59] பழைமையும் பொதுமையும் உடைய முருகன் என்ற பெயரடையாளத்தில் சமயத்தை இயக்கினார் அருணகிரிநாதர் என்பது கவனிக்கத் தக்கது; ஏனெனில் அது சேயோன்–சிவன் ஒருமை எனும் தொல்மரபுக்கே திரும்புவதாகும்.

இவரைத் தொடர்ந்து, பாலியலின் ஒழுங்கைப் பல வகையில் வலியுறுத்தி உயிர், உடல், உலக இடர்கள் இவற்றின் சிக்கல்களை விடுவித்துச் சும்மா இருத்தல் பற்றித் தாயுமானவர் பேசினார்; பலவான தத்துவங்களை இணைத்துச் சமரச நன்னிலை பற்றி விளக்கினார்.[60] அறிவியல் போக்கின் புற ஆய்வுக்கு மாறாக, அகச்சிதைவு நோக்கி வேகப்படுத்துவதான போக்குக்கு மாறாக, வாழ்விலேயே கட்டற்ற தன்மையை அனுபவிக்கும் நிலையாக அனக வாழ்வு குறித்து விளக்கிச் சமரசத்திற்கு மேலும் சுத்த சன்மார்க்கம் எனும் பெயரால் தன் நெறியை விளக்கினார் வள்ளலார். மரணமிலாப் பெருவாழ்வை நெறியாக்கிச் சத்திய மார்க்கம் எனும் உண்மையை நாட்டினார்.[61]

அடுத்து, முருகன், சிவன் என இரண்டாகிவிட்ட பெரும் பெயரடையாளங்களை இணைத்துச் சைவ சித்தாந்தத் தத்துவத்தை இயக்கினார் குமரகுருபரர்; இவரைத் தொடர்ந்து வடமொழி நூல்களையெல்லாம் இணைத்தே தமிழ்ச் சித்தாந்தத் தத்துவ மரபை விரிவு செய்தார் பாம்பன் குமரகுருதாசர்.[62] அறம், பொருள், இன்பம் இவற்றிற்கு மேலும் வீடு பேசாமல் அன்பு வாழ்வின் உயர்ச்சியில் தத்துவம் வளர்ச்சி பெறுமாறு, திருக்குறளுக்குப் பின் வந்த வினாக்களுக்கு விடையாக உடல்–உயிர் வாழ்வு நிலைபேற்றை விளக்கி ஔவைக் குறள் எனும் நூல் செய்தார் ஔவையார்.[63] உயிர் வாழ்வில் பண்பு பிறழாமலும், அதன் விளைவாக அன்பை வளர்த்தலுமாகவே வழங்கும் தத்துவத்தைப் பதிவு செய்து கொண்டுள்ளது தமிழ்.

**8. முடிவுரை**

மேற்கண்ட வரலாற்று ஆய்விலிருந்து பின்வரும் முடிபுகள் எழுகின்றன.

முதலாவது, சைவச் சிந்தனையின் வளர்ச்சி ஒரு தொடர்ச்சியான தமிழ் மரபுக் கோடு ஆகும்; அது வெளியிலிருந்து இரவல் பெற்றது அன்று. கந்து எனும் அடிமர அடையாளம்

---

[59] மேலது, ப. 137.

[60] மேலது, ப. 142.

[61] மேலது, ப. 142–143. வள்ளலார் அருளிய ஞான சரியைப் பாடலில் சுட்டப்படுவது ‘அனக வாழ்வு’; இதன் விளக்கத்தைத் தண்டபாணி சுவாமிகள் நானிலைச் சதகம் எனும் நூலில் விரிவாகப் பாடியுள்ளார் (மேலது, ப. 146).

[62] மேலது, ப. 143.

[63] மேலது, ப. 144. காண்க: ஔவையார், விநாயகர் அகவல்; ஔவைக் குறள்.

தொடங்கி, வேல், சேய், சேயோன், சிவன் என நீளும் பெயரடையாளத் தொடர்ச்சி; சங்கச் செய்யுளின் அறம்–கடவுள் இணைப்பு; தொல்காப்பியத்தின் இலக்கண வரையறை; திருக்குறளின் தத்துவ வரையறை; திருமுறைகளின் அனுபவப் பதிவு; சாத்திரங்களின் கொள்கைக் கட்டமைப்பு — இவை ஆறும் ஒரே நீரோட்டத்தின் ஆறு கட்டங்களே.

இரண்டாவது, இவ்வளர்ச்சியை ஒருங்கிணைக்கும் அச்சு அன்பு ஆகும். தொல்காப்பியம் மனத்தின் மாசு அறத் தெரிந்து என்று அறவியல் நிபந்தனையை வைத்தது; திருக்குறள் அன்பை உயிரின் உரிமைக் குணமாக வரையறுத்தது; காரைக்காலம்மையார் பேரன்பே இன்னும் பெருக்கு என்று அதனைப் பெருக்கக் கட்டளையிட்டார்; திருமூலர் அன்பே சிவம் என்று அதனைச் சமன்படுத்தினார்; மெய்கண்டார் அயரா அன்பின் அரன்கழல் செலுமே என்று அதனை அறிதலின் கருவியாக்கினார்; உமாபதி சிவம் அன்பு நிலையே அது என்று அதனையே முத்தியாக வரையறுத்தார். இது ஒரு தற்செயலான ஒற்றுமை அன்று; ஒரு மரபின் உள்ளார்ந்த தர்க்கம்.

மூன்றாவது, அன்பு எனும் கருத்தின் தத்துவ இயல்பு இவ்வளர்ச்சியில் படிப்படியாகக் கூர்மைப்பட்டது. அன்பு உணர்ச்சி அன்று; அது ஒரு பொருண்மை. அன்பு உடைமையாகத் தொடங்கி உரிமையாக முதிர்கிறது. அன்பின் சமூக வெளிப்பாடு பண்பு; உயிரற்ற பொருள்கள் மீதான வெளிப்பாடு அருள்; உயிர்ப் பொருள்கள் மீதான வெளிப்பாடு நட்பு; அதன் பயன் இன்பம்; அதன் நிறைவு முத்தி.

நான்காவது — இதுவே இக்கட்டுரையின் தனிப்பங்களிப்பு — தமிழ் மரபின் அறிவுத் தேடல் பொருள்முதல் நிலையிலிருந்து தொடங்கிக் கருத்துமுதல் நிலையை அடைந்தது. நிலம், பொழுது, கருப்பொருள் என்று கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கிய தமிழ் ஆராய்ச்சி, கண்ணுக்குப் புலப்படாத அன்பையே இறுதியில் கடவுளை அறியும் கருவியாகக் கண்டடைந்தது. கண்ணுக்குக் காட்டும் உளம்போல் உள்ளத்தைக் கண்டு காட்டுவது அயரா அன்பே என்னும் சிவஞானபோதச் சூத்திரம் இக்கண்டடைதலின் இறுதி வடிவம். இதனால் அன்பு என்பது இறையனுபவத்தின் விளைவு மட்டுமல்ல, அதன் முன்நிபந்தனையும் கருவியும் ஆகும் என்பது நிறுவப்படுகிறது.

ஐந்தாவது, இதன் விளைவாக ஒரு தெளிவான வரலாற்று முடிபு எழுகிறது. பழங்காலம் தொடங்கித் தமிழ் மரபில் கடவுளை அணுகுவது என்பது அன்பு சார்ந்து வளர்ந்து வந்த வரலாறே அன்றி வேறொன்றும் அன்று. சடங்கு மாறியது; கோயில் வடிவம் மாறியது; தத்துவக் கலைச்சொற்கள் மாறின; கடவுளின் பெயர் மாறியது. மாறாதது அன்பு மட்டுமே. எனவே சைவ சித்தாந்தம் என்பது ஒரு சடங்கு மரபின் தத்துவ விளக்கம் அன்று; அது தமிழ் மரபின் அன்பியல் வரலாற்றின் அறிவுமுறை வடிவம் ஆகும்.

இவ்வன்பைப் பேணி வளர்ப்பதே தமிழ் மரபு நமக்குக் கையளித்த மிகப்பெரிய கொடை. உலக அறிவியலும் இயற்கையும் முரணாகாமல் உலகை வாழ வேண்டிய செயல்முறைகளைத் தன்னகத்தே கொண்டு, மரணமின்மையை நோக்கி நகரும் வகையில்

தமிழில் தத்துவம் பேருருக் கொண்டுள்ளது.[64] இப்பேருருவின் அச்சாணி அன்பு. அதனை அறிவது தமிழ் மரபை அறிவது; அதனை வாழ்வது சைவ சித்தாந்தத்தை வாழ்வது.

**துணைநின்ற நூல்கள்**


1. நல்லூர் சா. சரவணன், முனைவர். தமிழ் வரலாற்றில் சமய தத்துவம். சென்னை, 2013.
2. தொல்காப்பியம் — பொருளதிகாரம் (களவியல், கற்பியல், மரபியல்), இளம்பூரணர் உரையுடன்.
3. முனைவர். வை. இரத்தினசபாபதி, திருமுறை தெளிவே சிவஞான போதம் சென்னைப் பல்கலைக்கழகம் (முதற் பதிப்பு 1979, இரண்டாம் பதிப்பு 2004) — பக். 1–33 சுருக்கம்
4. திருக்குறள், பரிமேலழகர் உரையுடன்.
5. குறிஞ்சிப்பாட்டு (பத்துப்பாட்டு), நச்சினார்க்கினியர் உரையுடன்.
6. புறநானூறு, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரையுடன்.
7. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி (பதினோராம் திருமுறை).
8. திருஞானசம்பந்தர் தேவாரம் (முதல் மூன்று திருமுறைகள்).
9. திருநாவுக்கரசர் தேவாரம் (நான்கு முதல் ஆறு வரையிலான திருமுறைகள்).
10. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (ஏழாம் திருமுறை).
11. மாணிக்கவாசகர், திருவாசகம் (எட்டாம் திருமுறை).
12. திருமூலர், திருமந்திரம் (பத்தாம் திருமுறை).
13. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் — பெரியபுராணம் (பன்னிரண்டாம் திருமுறை).
14. மெய்கண்டதேவர், சிவஞானபோதம், சிவஞான முனிவர் உரையுடன்.
15. உமாபதி சிவாசாரியார், திருவருட்பயன்.
16. வெள்ளைவாரணர், க. பன்னிரு திருமுறை வரலாறு. அண்ணாமலைநகர்.
17. P.K. Agarval. Skanda-Karthikeya: A Study in the Origin and Development. Banaras Hindu University, 1967.


[64] மேலது, ப. 144.